செய்தி வெளியீடு எண்.988 நாள்: 18 .12.2009

## செய்தி குறிப்பு

**மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் தொழில் கூட்டமைப்புகளுக்கு முத்திரை தீர்வை செலவினை மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உத்தரவு.**

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக திரு. மு.க. ஸ்டாலின்அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் சமூக நலக் கட்டுபாட்டில் செயல்பட்டு வந்த, மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுபாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர், சுய உதவிக் குழுக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

நகர்ப்புறத்தில் அமைந்துள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், 2008–09 ஆம் நிதியாண்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக 150 கோடி ரூபாய் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்திட சென்னையில், வள்ளுவர் கோட்டம் அருகே வணிக வளாகம் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கும் நிகழ்ச்சிகளில் பெறப்படும் கோரிக்கைகள் அனைத்தையும் ஆய்வு செய்து, அவ்வப்போது உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளிடமிருந்து கடன் பெறும் போது சமர்ப்பிக்கும் ஆவணங்களுக்கான முத்திரை தீர்வை செலவினை தள்ளுபடி செய்து உரிய ஆணைகள் வழங்கிட கோரி பெரும்பாலான சுய உதவிக் குழுக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன.

அதனடிப்படையில், 29.6.2009 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தில் கூட்டமைப்புகள் மற்றும் தொழில் கூட்டமைப்புகளுக்கு முத்திரை தீர்வைக்கு முழு விலக்கு அளிக்கப்படும் என மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் தொழில் கூட்டமைப்பின் மேம்பாட்டிற்காக வங்கிகளிடமிருந்து கடன் தொகை பெறும் போது சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்கான முத்திரை தீர்வைக்கான செலவினை மேற்கொள்ளுவதிலிருந்து முழு விலக்களித்து ஊரக வளர்ச்சித் துறை மூலம் அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.